1978 செப்டம்பர் 2]

மிலட்டூர் நகரப் பஞ்சாயத்து

*வினா எண் 47—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த மிலட்டூர் நகர பஞ்சாயத்தை இரண்டாக பிரிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. அ. செல்லப்பா: அந்த நகரப் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்கும்போது வட்டார மக்களிடமிருந்து கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படிப்பட்ட கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கும் வரவில்லை; ஊராக வளர்ச்சி இயக்குநருக்கும் வரவில்லை; மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் வரவில்லை; கோட்ட வளர்ச்சி அலுவலருக்கும் வரவில்லை.

(மணி அடிக்கப்பட்டு கேள்வி எண் 48 எடுத்துக் கொள்ளப் பெற்றது).

நடுவட்டம் பேரூராட்சியில் சினிமா திரை அரங்கம்

*வினா எண் 48—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியைச் சேர்ந்த நடுவட்டம் பேரூராட்சி மன்றம் ஒரு சினிமா தியேட்டர் கட்ட அனுமதி கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (ஆ): ஆம். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி கோரியுள்ளது, அவர் அச் செயற்குறிப்பின் மேல் சில கூடுதல் விவரங்கள் கேட்டு நடுவட்டம் நிர்வாக அலுவலருக்கு திருப்பி அனுப்பியிருக்கிறார்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நான் நீலகிரி மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரை இது குறித்துக் கேட்டபொழுது அவர் அதைப்பற்றிய எல்லா விவரங்களையும் அரசுக்கு அனுப்பிவிட்ட தாகவும் அது அரசினிடத்திலே தான் இருப்பதாகவும் சொல்கிறார். நடுவட்டம் பேரூராட்சியில் இப்போது ஏராளமான பணம் தேங்கிக் கிடக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வேறு எந்தவிதமான பொழுதுபோக்கும் இல்லாமல் அங்கேயிருந்து உதகை, கூடலூர் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியிருக் கிறது. ஆகவே அரசு இதிலே அதிக அக்கறை எடுத்துச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் குறிப்பின்படி அங்கே திரையரங்கு கட்டினால் அதனால் அந்தப் பேரூராட்சிக்கு வருவாய் வராது, இழப்பு தான் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வால்பாறை தொகுதியில் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகள்

*வினா எண் 49—**திரு. ர. ச. தங்கவேல்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வால்பாறை தொகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் எப்போது நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: வால்பாறை தொகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு களுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் படிப்படியாக நிறை வேற்றப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் முடியுமென்று எதிர் பார்க்கப்படுகின்றது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தோட்டக் காடுகளில் குடியிருக்கும் தோட்டத் தொழிலாளர்களில் 100-க்கு 90 சதமானம் பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள், அந்தப் பகுதிகளிலே யெல்லாம் மின்சார விளக்குகள் போட்டுக்கொடுக்க அரசே முன்வந்து தகுந்த நடவடிக்கை எடுப்பது அல்லவா நியாயம். ஆனால் அந்தத் தோட்டத் தொழிலாளர்கள் பணம்